மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.03/2021
அ.வ.எண்.56/2021

கண்ணாயாள் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. பெருமாயி (இறந்துவிட்டார்)
2. தம்பியண்ணன்
3. பழனிசாமி
4. மங்கம்மாள்
5. பழனியம்மாள்
6. வெள்ளையம்மாள்
7. கோவிந்தம்மாள்
8. முருகன்
9. சரஸ்வதி
10. அண்ணாதுரை
11. ஏ.ராஜ்குமார்
12. ஏ.கார்த்திக்
13. கே.பெருமா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 06.12.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எல்.ஸ்டாலின்ராஜா அவர்கள் ஆஜராகியும், 1 ம்எதிர்மனுதாரர் இறந்தவராகவும், 2 முதல் 12 ம்எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிலேயே தோன்றாதரப்பினர்களாகவும், 13 ம்எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.சிவராமன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151 ன் வழக்கினை திருத்த அனுமதி வழங்க கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுவின் சுருக்கம் : –

வழக்கு நிலுவையின் போது 1ம்பிரதிவாதி பெருமாயி 06.11..2021ல் 2 முதல் 13 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார். 1ம்பிரதிவாதியின் வாரிசுகள் ஏற்கனவே வழக்கில் தரப்பினர்களாக உள்ளனர். எனவே மனுவில் கூறியுள்ளவாறு வழக்கினை திருத்த அனுமதி கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) 13ம்எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

1ம்பிரதிவாதி 06.11.2021ல் தன்னுடைய மகன் மற்றும் மகள்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் என கூறுவது பொய்யாகும். 13ம்எதிர்மனுதாரர்/பிரதிவாதி 17.06.2020 தேதியிட்ட கிரய பத்திரத்தின் அடிப்படையில் உரிமையாளர் ஆவார். வழக்கில் எவ்வித உரிமையும் மனுதாரருக்கு இல்லாததால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 13ம்எதிர்மனுதாரர்/பிரதிவாதி கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் வழக்கு நிலுவையின் போது 1ம்பிரதிவாதி பெருமாயி 06.11..2021ல் 2 முதல் 13 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் எனவும், 1ம்பிரதிவாதியின் வாரிசுகள் ஏற்கனவே வழக்கில் தரப்பினர்களாக உள்ளனர் எனவும், எனவே மனுவில் கூறியுள்ளவாறு வழக்கினை திருத்த அனுமதி கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 13ம்எதிர்மனுதாரர் தரப்பில் 1ம்பிரதிவாதி 06.11.2021ல் தன்னுடைய மகன் மற்றும் மகள்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் என கூறுவது பொய் எனவும், 13ம்எதிர்மனுதாரர்/பிரதிவாதி 17.06.2020 தேதியிட்ட கிரய பத்திரத்தின் அடிப்படையில் உரிமையாளர் எனவும், வழக்கில் எவ்வித உரிமையும் மனுதாரருக்கு இல்லாததால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 13ம்எதிர்மனுதாரர் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) இருதரப்பிலும் 1ம்பிரதிவாதி இறந்துள்ளதையும், அவரது வாரிசுகள் ஏற்கனவே தரப்பினர்களாக உள்ளதையும் ஒப்புக் கொண்டுள்ளதால் 1ம்பிரதிவாதி இறந்துள்ளதை குறித்து மனுவில் கூறியுள்ள திருத்தமானது இருதரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்சனையை தீர்க்கும் வகையில் உள்ளதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.